செய்தி வெளியீடு எண் : 471 நாள்: 25.03.2022

**செய்தி வெளியீடு**

தேனி மாவட்டம், சின்னமனூர் வட்டாரத்தில் செயல்பட்டு வரும் எம்.பி.80 கோபால்நாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் பொது நகைக் கடன் தள்ளுபடி பெறாதவர்களின் புகார் அடிப்படையில் அச்சங்கத்தை துறை அலுவலர்கள் ஆய்வு செய்தபோது 52 நகைக் கடனுக்குரிய கடன் தொகை ரூ.30,64,200/-க்குரிய நகைகளை எடுத்துச் சென்று தனியார் நிதி நிறுவனத்தில் மறு அடகு வைத்துள்ளது கண்டறியப்பட்டது.

மேற்படி குற்றச் செயலை செய்த முருகராஜன், சங்கச் செயலாளர் 18.03.2022ல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டும், குற்றவியல் நடவடிக்கை தொடர் வணிக குற்றப் புலனாய்வு பிரிவில் 24.03.2022ல் குற்றப்புகர் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தனியார் நிதி நிறுவனங்களில் மறு அடகு வைக்கப்பட்டுள்ள பொது மக்களுடைய நகைகள் திருப்பி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மண்டலம் கோவில்பட்டி சரகத் துணைப்பதிவாளர் கட்டுப்பாட்டிலுள்ள ஓ.286 வில்லிசேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் சொந்த நிதி ஆதாரம் இல்லாமல் பிப்ரவரி 2021 மற்றும் மார்ச் 2021 மாதங்களில் 489 நபர்களுக்கு ரூ.3.79 கோடி அளவிற்குக் கடன் வழங்காமலேயே, நகையை மட்டும் பெற்று அடகு வைத்து கடன் வழங்கியதாக ஆவணங்கள் தயார் செய்து முறைகேடுகள் நடைபெற்றுள்ளது. இந்த நகைகள் அனைத்தும் தள்ளுபடி பெறும் நோக்கத்திற்காக ஜனவரி மற்றும் பிப்ரவரி 2021 மாதங்களில் அடமானம் வைக்கப்பட்டவை ஆகும்.

முறைகேட்டிற்குக் காரணமான சு.மாரியப்பன், சங்கச் செயலர் 24.03.2022ல் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். திரு.உ.செல்வராஜ், சங்கத்தின் தலைவர் 24.03.2022 முதல் தற்காலிகப் பதவிநீக்கம் செய்யப்பட்டு, முறைகேட்டிற்கு காரணமான சங்கச் செயலாளர் மற்றும் இதர நபர்கள் மீது குற்றப்புகார் அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முறைகேடுகள் நடைபெற்றுள்ள மேற்கண்ட இரண்டு சங்கங்களிலும் 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 81இன் கீழ் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டுத் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in